**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC.29/2021 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : LW-2/PW- 5 | Village: |
| Name | : அழகேசன் | Age :65 |
| Father's/Husband's Name | : பெருமாள் | Taluk : |
| Nationality | : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 16.07.2025**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் ஸ்ரீதர்ராஜா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

1, 2 **எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது திருப்புறம்பியம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் அரசு போக்கு வரத்து கழகத்தில் நடத்துநராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். அசா4 ஆடலரசை எனக்கு தெரியும். நாங்கள் இருவரும் ஒன்றாக பணிபுரிந்தோம். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் இருவரும் ஆட்டோவில் வந்தார்கள். கடந்த 18.10.2010 ம் தேதி மாலை 5.15 மணியளவில் TN45 3053 என்ற பேருந்தில் நான் நடத்துநராகவும் அசா4 ஆடலரசு ஓட்டுநராகவும் மயிலாடுதுறையிலிருந்து கும்பகோணத்திற்கு வரும்போது திருபுவனம் எண்ட்ரன்சில் எங்களது பேருந்திற்கு முன்பாக ஒரு வண்டி பிரேக்டவுன் ஆகி நின்று

கொண்டிருந்தது. அதனால் அசா4 ஹாரன் அடித்தபோது எங்களது பேருந்திற்கு எதிரே TN68 62 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவில் வந்த 4 நபர்கள் அசா4 டம் வந்து ஏண்டா ஹாரண் அடிக்கிறாய் என்று கேட்டு கண்ணா பின்னா என்று அசிங்கமாக திட்டி பேருந்தின் கதவை திறந்து அசா4 ஐ கன்னத்தில் அடித்துவிட்டார்கள். அதில் பாபு என்பவர் கல்லை எடுத்து பேருந்தின் முன் பக்க கண்ணாடியை உடைத்து சேதமாக்கிவிட்டார். ( சாட்சி தன்னிச்சையாக கையை நீட்டி எதிரி காக்கி சட்டை அணிந்திருக்கும் நபர் பாபு என்று கூறினார்). அதன் மதிப்பு சுமார் ரூ.2000/- இருக்கும். நான் எங்கள் கிளை மேலாளர் சுரேஷ் என்பவருக்கு போன் மூலம் தகவல் கூறிவிட்டு நாங்கள் பேருந்தை எடுத்துக் கொண்டு திருவிடைமருதூர் காவல் நிலையம் சென்று விட்டோம். போலிசார் அசா4 ஐ மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அசா4 திருவிடைமருதூர் மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்று அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அசா4 திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஓட்டுநர் ஆடலரசை பாபு மட்டும்தான் அடித்தார் என்றால் இல்லை ஆட்டோவில் வந்த அனைவருமே அடித்தார்கள். மேற்படி சங்கதியை போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியாது, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரிகள் கன்னத்தில் அடிக்கவில்லை என்றாலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அசா4 ஐ அடித்து பேருந்து கண்ணாடியை உடைத்தது கண்ணன் மகன் பாபு என்றால் சரிதான்.

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- J. Jayganesh,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.29/2021 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-1/PW- 4 <br> Name : ஆடலரசு <br> Father's/Husband's Name : சுப்ரமணியன் <br><br> Nationality : Indian | Village: <br> Age :46 <br> Taluk : <br><br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 16.07.2025**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் ஸ்ரீதர்ராஜா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

1, 2 **எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது பிளாஞ்சேரி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் அரசு போக்கு வரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வந்தேன். சாட்சி அழகேசனை எனக்கு தெரியும். நாங்கள் இருவரும் ஒன்றாக பணிபுரிந்தோம். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 18.10.2010 ம் தேதி மாலை 5.15 மணியளவில் TN45N3053 என்ற பேருந்தில் நான் ஓட்டுநராகவும் சாட்சி அழகேசன் நடத்துநராகவும் சென்னையிலிருந்து கும்பகோணத்திற்கு வரும்போது திருபுவனம் கடைத்தெருவில் எனது பேருந்திற்கு முன்பாக ஒரு ஆம்னி பஸ் நின்று கொண்டிருந்தது. நான் வழி வேண்டி எனது பேருந்தின்

ஹாரன் அடித்தபோது எனது பேருந்திற்கு எதிரே TN68A0622 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவில் வந்த 4 நபர்கள் என்னிடம் வந்து ஏண்டா ஹாரண் அடிக்கிறாய் என்று கேட்டு குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே என்று அசிங்கமாக திட்டி பேருந்தின் கதவை திறந்து என்னை கன்னத்தில் அடித்துவிட்டார்கள். அதில் ஒரு நபர் எடுத்து முன் வலது பக்க கண்ணாடியை கல்லை எடுத்து விட்டெரிந்ததில் கண்ணாடி உடைத்து சேதமாகிவிட்டது. அதன் மதிப்பு சுமார் ரூ.10000/- இருக்கும். நடத்துநர் அழகேசன் எங்கள் கிளை மேலாளர் சுரேஷ் என்பவருக்கு போன் மூலம் தகவல் கூறிவிட்டு நாங்கள் பேருந்தை எடுத்துக் கொண்டு திருவிடைமருதூர் காவல் நிலையம் சென்று விட்டோம். போலிசார் என்னை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் திருவிடைமருதூர் மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்று அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். ( **மேற்படி புகார் மனு அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) . போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- J. Jayganesh,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர். (FAC)**